# ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் வீற்றிருக்கும்

# இந்து ஆலயம் உடைப்படும் அபாயம்



கோலாலம்பூர், மார்ச் 20-

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னதாக நிர்மாணிக்கப்பட்ட இந்து கோவில் இடிக்கப்படும் அபாயம் இருக்கிறது. இதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று இந்து பக்தர்கள் வலியுறுத்துகின்றனர். கோலாலம்பூர் மாநகரில் பரபரப்பு மிகுந்த மஸ்ஜிட் இந்தியா பகுதியில் வீற்றிருக்கும் அந்த ஆலயம் இன்னும் சில வாரங்களில் இடிக்கப்படும் என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னதாக ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதியில் தேவிஸ்ரீ பத்தரகாளி அம்மன் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. தற்போது ஜேக்கல் மால் பேரங்காடி அருகே உயரமான வர்த்தக கட்டடங்களுக்கு நடுவில் அந்த ஆலயம் உள்ளது.

பக்கம் 12

முதல்பக்கத் தொடர்ச்சி...

## ஜாலான் மஸ்ஜிட் ....

அந்த ஆலயம் அமைந்திருக்கும் நில பகுதியை தனியார் நிறுவனம் ஒன்று வாங்கி விட்டது என்றும் இதனை அடுத்து ஆலயத்தை அகற்ற வேண்டும் என்று கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் கேட்டு கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இன்னும் சில வாரங்களில் அந்த ஆலயம் அகற்றப்படும். அங்கு பள்ளிவாசல் நிர்மாணிக்கப்படும் என்றெல்லாம் கூறப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே விற்கப்பட்டு விட்டது என்று தெரிகிறது.

இதன் காரணமாக ஆலயத்தின் அந்த பகுதியில் இருந்து வேறு ஒரு இடத்திற்கு மாற்றும்படி ஆலய நிர்வாகத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஆனால் மஸ்ஜிட் இந்தியா பகுதிலேயே ஓர் இடத்தை ஒதுக்க வேண்டும் என்று ஆலய நிர்வாகம் கேட்டு கொண்டது என்றும் அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிகிறது.

இதனிடையே இந்த விவகாரம் தொடர்பாக பெட்டாலிங் ஜெயாவில் அலுவலகத்தை கொண்டிருக்கும் சுயேட்சை வழக்கறிஞர்கள் குழுவினர் இன்று செய்தியாளர்களை சந்திப்பார்கள் என்று கூறப்படுகிறது.